Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 21, 2024

செவ்வாய்க்கிழமை, மே 21, 2024 | ஒளி: 09 கதிர்: 256 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## 29,4479 பேர் பாதிப்பு



நாட்டில் நிலவும் காலநிலை காரணமாக 8,284 குடும்பங்களைச் சேர்ந்த 29,447 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் துசித வைத்தியரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இலங்கையைச் சேர்ந்த 4 ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாதிகள் கைது



இலங்கையைச் சேர்ந்த நால்வரை குஜராத் தீவிரவாத தடுப்புப் பிரிவு, இந்தியாவில் அகமதாபாத்திலுள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் குறித்த நால்வரையும் கைது செய்துள்ள குஜராத் தீவிரவாத தடுப்புப் பிரிவு. தீவிர விசாரணைக்காக சந்தேக நபர்களை அழைத்துச் சென்றுள்ளது.

அகமதாபாத் விமான நிலையத்திற்கு சந்தேக நபர்கள் நால்வரும் ஏன் வந்தார்கள் என்பதற்கான துல்லியமான காரணம் இதுவரை தெளிவாக தெரியவில்லை. இதனால் அந்த விமான நிலையம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஐ.பி. எல் போட்டிகள் இடம்பெறுவதால் தகுதிச் சுற்று மற்றும் எலிமினேட்டர் ஆட்டங்களுக்காக மூன்று அணிகள், அகமதாபாத் விமான நிலையத்திற்கு வருவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னதாக குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## எலோன் மஸ்க் இலங்கை வருகிறார்

தனது ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணைய சேவையை தொடங்குவதற்காக இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை எலோன் மஸ்க் ஏற்றுக்கொண்டதாகவும் இவ்வாண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி விக்கிரமசிங்க, காலநிலை விவகாரங்கள் தொடர்பான தனது ஆலோசகர் ருவான் விஜேவர்தனவுடன் இந்தோனேசியாவின் பாலியில் எலோனைச் சந்தித்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் உலக அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஜனாதிபதி, ஞாயிற்றுக்கிழமை (19) கலந்துரையாடினார்.

எவ்வாறாயினும், எலோனின் இலங்கை விஜயத்தின் சரியான திகதிகள் இன்னும் நிர்ணயிக்கப்படாததுடன் இலங்கை அரசாங்கம் எலோனின் குழுவுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

தொடர்ச்சி P2

## சகோதரியின் பெயரில் டென்மார்க் சென்று திரும்பிய சகோதரி கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனது சகோதரியின் பெயரில் கடவுச்சீட்டு மற்றும் வங்கி ஆவணங்களை போலியாகப் பெற்ற குற்றச்சாட்டில் டென்மார்க் பிரஜையான சகோதரியை யாழ்ப்பாண பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (20) கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட தற்போது டென்மார்க் பிரஜாவுரிமை பெற்று டென்மார்க்கில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



தெஹ்ரான்

ஜனாதிபதி இப்ராகிம் ரைசி

வெளியுறவுத்துறை அமைச்சர் உசைன்

# ‘ஹெலி’ விபத்தில் ஈரான் ஜனாதிபதி உயிரிழப்பு

### வெளியுறவுத்துறை அமைச்சர் உட்பட ୨ பேர் பலி

ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி, ஞாயிற்றுக்கிழமை (20) அசர்பைஜான் சென்றார். அசர்பைஜானில் புதிதாக கட்டப்பட்ட அணை திறப்பு விழாவிற்காக சென்றார். அசர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியோவ் உடன் அணை திறப்பு விழாவில் கலந்துகொண்ட இப்ராகிம் ரைசி ஹெலிகாப்டர் மூலம் ஈரான் புறப்பட்டார்.

அவருடன் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் உசைன் மற்றும் மூத்த அதிகாரிகள் ஹெலிகாப்டரில் பயணித்தனர். அவர்கள் அனைவரும் பலியாகியுள்ளனர் என்றும் அந்நாட்டு செய்தி தெரிவிக்கின்றது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணில் இரங்கல் தெரிவிப்பு



ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளியுறவு அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் பிற மூத்த ஈரானிய அதிகாரிகளின் துயர மரணத்தால் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க X தளத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மஹிந்த இரங்கல்



ஈரான் நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ திங்கட்கிழமை (20) ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவை கேள்வியுற்று இலங்கையில் உள்ள ஈரானிய தூதரகத்திற்கு சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2



## “ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கவும்”

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரின் தேசிய ஒற்றுமை மற்றும் சமூக ஆதரவை மேம்படுத்தும் சேவைகளைக் கருதி,வெசாக் போயா தினத்தில் ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மல்வத்து, அஸ்கிரி, ராமன்ன நிகாயா, அமரபுர மகா சங்க சபை பீடாதிபதிகளே இந்த கோரிக்கையை எழுத்துமூலமாக விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கஞ்சியை பரிமாறிய நால்வரும் விடுவிப்பு



தீஷான் அஹ்மட்

சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறினர் என்றக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வரும் மூதூர் நீதிவான் நீதிமன்றத்துக்கு திங்கட்கிழமை (20) அழைத்து வரப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் 12 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நால்வரும், நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் இம்மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

## பிறந்த நாளன்றே பலியான யாழ்.யுவதி

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதியதில், புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த சுதாகரன் சாருஜா (வயது 23) யுவதி திங்கட்கிழமை (20) உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியில், பால் எடுத்து சென்ற வேளை , புத்தூர் - கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்திக்கு அருகில் இராணுவ வாகனம் மோதியதில் யுவதி படுகாயமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஒரு மீனின் விலை ஒரு கோடி ரூபாய்

வி.ரி.சகாதேவராஜா,பாறுக் ஷிஹான்

காரைதீவில் ஒரு கோடி ரூபாய் பெறுமதியானது நீல கிளவல்லா (தூணா இனத்தைச் சேர்ந்த மீன் திங்கட்கிழமை (20) பிடிபட்டுள்ளது.

காரைதீவு பகுதியில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் வலையிலேயே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியானது என நம்பப்படும் 49 கிலோ கிராம் நிறையுடைய உள்ளூரில் நீல ஹெலவள்ளா(ஹென்டா) என அழைக்கப்படும் நீல தூணா சிக்கியுள்ளது.

பெரிய கண் மற்றும் நீல நிற வர்ணங்களை கொண்டுள்ள குறித்த மீன் அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் மீனவரின் வலையில் பிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## தமிழரசுக்கட்சிக்கு புதிய நிர்வாகம்

க. அகரன்



தமிழரசுக்கட்சிக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை முடிவுறுத்தி கட்சியின் தெரிவுகளை மீளவும் நடத்துவதற்கு கட்சியின் மத்தியகுழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்றது. இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

திருகோணமலை நீதிமன்றில் நிலுவையில் உள்ள கட்சித் தொடர்பான வழக்கில், வழக்காளி கோருகின்ற நிவாரணங்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# ‘ஹெலி’ விபத்தில் ஈரான் ஜனாதிபதி உயிரிழப்பு

ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணத்தின் ஜோல்பா நகர் அருகே பறந்துகொண்டிருந்த ஹெலிகாப்டர் திடீரென மாயமானது. இதையடுத்து ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகம் எழுந்ததால் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட பகுதியில் ஈரான் மீட்புக்குழுவினர் விரைந்து சென்று தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

மலைப்பகுதி என்பதாலும் அதிக பனிமூட்டமாக இருந்ததாலும் தேடுதல் பணியில் பெரும் சிரமம் ஏற்பட்டது. மாயமான ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதாக ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

15 மணி நேரத்திற்குமேல் தேடுதல் பணிகள் தீவிரமாக நடைபெற்ற நிலையில் ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணம் தப்ரிஸ் நகர் டவில் கிராமம் அருகே உள்ள மலைப்பகுதியில் ரைசி பயணித்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், ஹெலிகாப்டர் விபத்தில் ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி உயிரிழந்ததாக ஈரான் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி இப்ராகிம் ரைசியுடன் ஹெலிகாப்டரில் பயணித்த வெளியுறவுத்துறை மந்திரி உசைன் அமீர், கிழக்கு அசர்பைஜான் மாகாண கவர்னர் மாலிக் ரஹ்மதி உள்பட 9 பேரும் விபத்தில் உயிரிழந்தனர்.

ஹெலிகாப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, மகாவலி திட்டத்திற்கு அடுத்தபடியாக இலங்கையின் பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இடம்பெறும் “உமா திய ஜனனி” பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஏப்ரல் (24) இலங்கை -ஈரான் ஜனாதிபதிகளினால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்விற்கு ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இலங்கைக்கு வருகைதந்து சுமார் ஆறு மணிநேரம் நாட்டில் தங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணில் இரங்கல் தெரிவிப்பு

“அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், ஈரான் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது பிரார்த்தனைகள் ஜனாதிபதி ரைசி மற்றும் அவரது குடும்பத்தினருடன் இருக்கின்றன" என்று ஜனாதிபதி கூறினார்.

## மஹிந்த இரங்கல்

அங்கு ஈரானிய தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் சந்தித்து இரங்கலை தெரிவித்ததோடு, இரங்கல் புத்தகத்தில் குறிப்பொன்றையும் பதிவிட்டுள்ளார்.

## 29,4479 பேர் பாதிப்பு

அநுராதபுரம் மாவட்டத்தின் கிழக்கு நுவரகம்பலத்த பிரதேசத்தில் பெய்த கனமழை மற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக இருவர் காயமடைந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிவிதிகல, கொடகவெல மற்றும் பலாங்கொட ஆகிய இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததாலும், பலத்த காற்று காரணமாகவும் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 8,000 பேரும், திருகோணமலையில் 1,334 பேரும், கிளிநொச்சியில் 946 பேரும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியரத்ன தெரிவித்தார்.

## எலோன் மஸ்க் இலங்கை வருகிறார்

“இலங்கை எவ்வாறு ஒப்புதல் செயல்முறையை விரைவுபடுத்துகிறது என்பதைப் பொறுத்தே, அது முடிந்தவுடன், Starlink ஐ அறிமுகப்படுத்த எலோன் இலங்கைக்கு வருவார். இந்த ஆண்டின் இறுதியில் அவர் இலங்கைக்கு வருவார் என்று தற்காலிகமாக விவாதிக்கப்பட்டது" என்று தகவலறிந்த வட்டாரம் தெரிவித்தது.

டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்களின் பில்லியனர் தலைவரும், எக்ஸ் சமூக தளத்தின் உரிமையாளருமான எலோன் மஸ்க், ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணையச் சேவையைத் தொடங்க இந்தோனேசியாவின் ரிசார்ட் தீவான பாலிக்கு வந்தார்.

ஸ்டார்லிங்க் சேவையை இலங்கையில் தொடங்குவதற்கு எலோன் விண்ணப்பம் அனுப்பியிருந்ததுடன், மேலும் அந்தச் செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு ஜனாதிபதி ஒப்புக்கொண்டார்.

இலங்கையின் கிராமிய கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு இவ்வாறான இணைய சேவை உதவிகரமாக அமையும் எனவும் ஜனாதிபதி கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

## கஞ்சியை பரிமாறிய நால்வரும் விடுவிப்பு

இந்நிலையில், இவர்களை விடுதலை செய்வதற்கான நகர்த்தல் பத்திரம் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை (17) தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரரப் பிணையில் நால்வரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

நகர்த்தல் பத்திரத்தை முன்கூட்டியே கொண்டு வராமையால், சந்தேக நபர்களும் நீதிமன்றத்துக்கு அன்றைய தினம் அழைத்துவரப்படவில்லை. எனினும் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

சனி,ஞாயிறு விடுமுறை தினங்கள் என்பதால் அவர்கள் மூதூர் நீதிமன்றத்துக்கு திங்கட்கிழமை (20) அழைத்துவரப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் பிரசன்னமாகி இருந்தார். தங்களுடைய விடுதலைக்காக குரல் கொடுத்த சட்டத்தரணிகள்,கட்சியின் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.

## பிறந்த நாளன்றே...

படுகாயமடைந்த யுவதியை அங்கிருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை யுவதி உயிரிழந்துள்ளார்.

யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மே. 20 ஆம் திகதி யுவதியின் பிறந்தநாளாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சகோதரியின் பெயரில் டென்மார்க் சென்று திரும்பிய சகோதரி கைது

கைது செய்யப்பட்ட பெண் கடந்த 2015ஆம் ஆண்டளவில் தனது சகோதரியின் பெயரில் போலியான கடவுசீட்டை பெற்று டென்மார்க் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்த அவரது சகோதரி 2019ஆம் ஆண்டளவில் தனக்கு கடவுச்சீட்டு எடுப்பதற்காக விண்ணப்பித்த போது , அவரது பெயரில் ஏற்கெனவே கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அவருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை. தனது சகோதரி தனது பெயரில் கடவுச்சீட்டு எடுத்து வெளிநாடு சென்ற விடயம் அப்போதுதான் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற தனது தாயாரின் இறுதி கிரியைக்காக டென்மார்க்கில் இருந்து வந்தவர் , போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி தனது சகோதரியின் பெயரில் யாழ்ப்பாணத்தில் வங்கி கணக்கொன்றினையும் ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் அறிந்துகொண்ட யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரி யாழ்ப்பாண பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , டென்மார்க் பிரஜையான பெண்ணை கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## “ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கவும்”

கூரகல ரஜமஹா விகாரை தொடர்பான 2016 ஆம் ஆண்டு ஊடக விவாதத்தின் போது முரண்பாட்டை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கலபொட அத்தே ஞானசார தேரருக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரதம பீடாதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சமூகத்தில் இடம்பெறும் தீவிரவாத செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளை எச்சரிக்க ஞானசார தேரர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவரது நடவடிக்கைகள் அரச பாதுகாப்புப் படைகளுக்கு முக்கியமான ஆதரவை வழங்கியது, இலங்கையில் சில தீவிரவாதக் குழுக்கள் பரவுவதைத் தடுக்கவும் உதவியது.

இதன் விளைவாக, இலங்கை சமூகத்தில் பல சாத்தியமான தீவிரவாத மோதல்கள் தவிர்க்கப்பட்டதாக குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## தமிழரசுக்கட்சிக்கு புதிய நிர்வாகம்

அந்தவகையில் கட்சியின் நிலைப்பாடுகளை நிலைநிறுத்தி யாப்பினுடைய அடிப்படை விடயங்களை முன்னிறுத்தி எவ்வாறு செயலாற்றியிருக்கின்றோமோ அதனடிப்படையில் தலைவர் உட்பட அனைத்து பதவிகளுக்கான தெரிவுகளையும் மீள நடத்துவதென ஏகமனதாக தீர்மானித்திருக்கின்றோம் என்றார்.

அந்தவகையில் முதலில் வழக்கை வாபஸ்வாங்கி கட்சியினை எமது வீட்டிற்கு கொண்டுவருவதற்கான முயற்சியினை எடுத்திருக்கின்றோம்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. சிரேஸ்ட தலைவர்களான சம்பந்தன், மாவைசேனாதிராஜா அவர்களின் கருத்துக்களும் இதன்போது பரிசீலிக்கப்பட்டன என்றார்.

இவற்றினை ஒரு ஆலோசனைக்காக எடுத்திருக்கின்றோம். இது தொடர்பாக தொடர்ந்தும் மத்தியசெயற்குழு மாவட்டக்கிளைகளுடன் கூடி உரியநேரத்தில் முடிவினை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

அதுவரை கட்சியின் தலைவராக மாவைசேனாதிராஜாவும் பொதுச்செயலாளராக ப.சத்தியலிங்கமும் செயற்படுவார்கள். எமது கட்சி இயங்கிக்கொண்டிருக்கின்றது. வழக்கு செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட பின்னர் புதிய தெரிவுகள் இடம்பெறும். என்றார்

## புத்தளம் பாடசாலைகளுக்கு...

ரஸீன் ரஸ்மின்

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நாளை செவ்வாய்க்கிழமையும் (21), நாளை மறுதினம் புதன்கிழமையும் (22) விடுமுறை வழங்குமாறு வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் பணித்துள்ளார்.

தொடர்ச்சியாக பெய்துவரும் பலத்த மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் பாடசாலைகள் உட்பட பல பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

இதனை கவனத்திற்கொண்ட மாகாண ஆளுநர் , புத்தளம் மாவட்டச் செயலாளர் மற்றும் வடமேல் மாகாண பிரதம செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு கருதி பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க பணித்துள்ளார்.

## ஒரு மீனின் விலை ஒரு கோடி ரூபாய்



ஒரு கிலோ கிராம் தூணா மீனின் விலை 24 இலட்சம் ரூபாயாகுமென கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகை மீனில், ஒருதுண்டு சாப்பிட்டால், பத்து வருடங்கள் மேலதிகமாக வாழக்கூடிய சத்து கிடைக்குமென நம்பப்படுகின்றது.

பிடிபட்ட மீனை முறைப்படி இனங்கண்டு முறையாக பேணப்படாமையினால் ஒரு கிலோ கிராம் 3 லட்சம் ரூபாய்க்கு பேசப்படுகிறது.

கடும் போராட்டத்திற்கு மத்தியில் பிடிக்கப்பட்ட குறித்த மீன் இனங்கள் 7 வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளதாகவும் யாவும் பெறுமதி மிக்கதாக உள்ளதாகவும் பாரிய மீன்களை கொள்வனவு செய்கின்ற நிறுவனங்களே இவ்வாறான மீன்களை அதிக விலை கொடுத்து வாங்குவதாகவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

## “தமிழர்களுக்கு ஒரேயொரு பலம் வாக்குபலமாகும்”

கனகராசா சரவணன்

கடந்த காலத்தில் தமிழர்கள் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் முப்படையினரையும் வைத்திருந்தது வரலாறாகும். இவைகள் இருந்தே இலங்கை அரசாங்கமும்; சர்வதேசமும் எங்களை ஏமாற்றயது நாங்கள் நலினமடையப்பட்டு அனைத்தையும் இழந்துள்ளோம். எனவே எமக்கு உள்ள ஒரேயொரு பலம் வாக்குபலம் அதற்கு ஒற்றமையே எமது பலம் என்பதை நிரூபிக்க வேண்டுமாயின் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒருமித்த முடிவுகளை எடுக்கவேண்டும் என என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.ஈர்.எல்.எப். சிரேஷ்ட தலைவருமான இரா. துரைரெட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் திங்கட்கிழமை (20) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் ஏற்பட்ட இறுதி யுத்தத்தில் மனித அவலங்கள், மனித உரிமை மீறல், படுகொலை செய்த சம்பவங்கள் தொடர்பான மிகவும் நீண்டகாலமாக பல முயற்சிகளை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக பல கட்சிகள், தனிநபர்கள், பொது அமைப்புக்கள், பாதிக்கப்பட்டோர் பல நடவடிக்கையை எடுத்து அந்த நடவடிக்கையின் பிரகாரமாக முள்ளிவாய்காலுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை செயலாளர் நாயம் வந்து அஞ்சலி செலுத்தியமை சர்வதேசத்தின் பால் ஈர்ந்தவர்களுக்கு வெற்றியாகும் இதற்கு நன்றி தெரிவிக்கின்றோம் என்றார்.

முள்ளிவாய்கால் நினைவேந்தலில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் நடந்து கொண்ட முறை என்பது ஏற்புடையதல்ல, எந்த மனித நாகரிகத்தை ஏற்றுக் கொண்டவர்களும் அவர்களுடைய செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது அப்படிப்பட்ட துயரமான சம்பங்களை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி பொது வேட்பாளர் தொடர்பாக வடக்கு, கிழக்கில் பல கருத்துக்கள் உலாவிவருகின்றன. மீண்டும் மீண்டும் அழுத்தமாக கூறிக்கொள்கின்றோம் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்காக இருந்தது ஒரு தனிமனித சுதந்திரமானது வாக்களிக்கும் உரிமையாகும். ஒரு தனிமனிதன் தனது உரிமையான வாக்கினை அளித்து ஒருவனை வெற்றி பெறவைப்பதற்கும் தோல்வியடைய வைப்பதற்கும் அவன் சிறப்புரிமையை எவராலும் மறுக்க முடியாது என்றார்.



# தேசிய போர்வீரர் தின நிகழ்வு

தாய்நாட்டின் ஒருமைப்பாட்டைக் பாதுகாக்க தம் இன்னுயிர்களை தியாகம் செய்த வீரர்களை கௌரவிக்கும் 15வது தேசிய போர்வீரர் தின நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பாராளுமன்ற விளையாட்டரங்க வளாகத்தில் அமைந்துள்ள போர்வீரர் நினைவுத்தூபிக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாதுகாப்புப் பணிக்குழாம் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன், முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒப் ஃப்ளீட் வசந்த கரண்ணாகொட, முன்னாள் விமானப்படைத் தளபதி மார்ஷல் ஒப் த எயார் ரொஷான் குணதிலக்க, மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.







# “நினைவேந்தலுக்கு பொதுகொள்கை வேண்டும்”

புலிகள் இயக்கம் மீதான தடை இருப்பதால், அந்த இயக்கத்தின் சின்னங்களை பயன்படுத்தாமல் வருடா வருடம் முரண்பாடுகள், கைதுகள், கெடுபிடிகள் என்பன ஏற்படா வண்ணமும், நினைவேந்தல் தொடர்பில், ஒரு பொது கொள்கையை அறிவியுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைந்து நினைவேந்தல் நிகழ்வுகளை தமது வீடுகளிலோ, பகிரங்க தளங்களிலோ நடத்த தமிழ் மக்களுக்கு ஐநா அங்கீகரித்த உரிமை இருக்கிறது என்ற குறைந்த பட்ச விஷயத்தை கூட இலங்கை ஆட்சியாளர்களின் தலைகளில் திட்டவட்டமாக புகுத்த சர்வதேச சமூகம் இதுவரை தவறி உள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.

அகோர யுத்தம் நிறைவு அடைந்து இன்று பதினைந்து ஆண்டுகள் ஆகி விட்டன. அன்று அகோர யுத்தத்திற்கு முழுமையான ஆதரவு ஒத்துழைப்புகளை அன்றைய இலங்கை அரசுக்கு வழங்கிய சர்வதேச சமூகம், தமிழர்களை பார்த்து யுத்தம் முடிந்த உடனேயே அரசியல் தீர்வையும், பொறுப்பு கூறலையும் பெற்று தருவதாக உறுதி கூறியது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் உறுதி கூறியது. இலங்கை வந்து சென்ற அனைத்து ஐநா மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள், உள்நாட்டில் பணியாற்றும் ராஜதந்திர பிரதிநிதிகள் அனைவரும், அன்றைய தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் என்ற முறையில் என்னை சந்தித்து, என்னிடம் இந்த உறுதிப்பாட்டை பலமுறை கூறி உள்ளனர்.

ஆனால், இன்று நிலைமை என்ன? அரசியல் தீர்வு, பொறுப்பு கூறல் என்பன ஒருபுறம் இருக்க, யுத்தம் நிறைவு அடைந்து பதினைந்து வருடங்கள் ஆகி விட்ட இன்று, தமது உறவுகளை நினைந்து நினைவேந்தல்கள் நிகழ்த்தி கண்ணீர் விடும் குறைந்த பட்ச உரிமையை கூட சர்வதேச சமூகம் இலங்கை தமிழ் மக்களுக்கு பெற்று தர தவறி உள்ளது. இலங்கை பொலிஸாரால் கைதுகள், கெடு பிடிகள் நடத்தப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வருடா வருடம் மத தல யாத்திரை போவதை போல் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் ஜெனிவா போய் வருகிறார்கள். அங்கு தீர்மானங்கள் வருடா வருடம் நிறைவேறுகின்றன.

ஆனால், இங்கே நாட்டுக்குள்ளே தீர்வுகள் இன்னமும் வரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.








# தபால் தலை வெளியிடப்பட்டது...

இந்திய வம்சாவளியினரின் 200 ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியை வெளிப்படுத்தும் வகையில் தபால் தலை வெளியிடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் தலைமையில் இந்நிகழ்வு கொழும்பிலுள்ள தாஜ்சமுத்திரா ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்றது.

வெளியிடப்பட்ட தபால் தலை ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

# மிதந்த மாணவியின் சடலம் மீட்பு



பி.கேதீஸ்

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த பாடசாலை மாணவியான தலவாக்கலை ரத்னில்லகலையைச் சேர்ந்த 18 வயதான பெரியசாமி டிலுக்சனா என்ற மாணவி, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை (19) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கல்வி பயின்று வந்துள்ள நிலையில் சனிக்கிழமைம (18) இரவு குறித்த மாணவி வீட்டில் பாடம் படித்துக்கொண்டிருந்ததாகவும் அதிகாலையில் மாணவி வீட்டிலிருந்து காணாமல் போய்வுள்ளதாகவும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீட்டில் படித்துக் கொண்டிருந்த மகள் காலையில் வீட்டில் இருக்கவில்லை என அவரது தந்தை ஞாயிற்றுக்கிழமை (19) காலை தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு பதிவு செய்து நிலையில் குறித்த மாணவி ஞாயிற்றுக்கிழமை (19) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு ரிஷாட் அனுதாபம்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஈரானிய வெளிவிவகார அமைச்சர், தப்ரிஸ் மஸ்ஜிதின் இமாம் மற்றும் கிழக்கு அஜர்பைஜான் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் ஹெலிகாப்டர் விபத்துகுள்ளாகி பலியான துயரச் செய்திக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும், அவர்களின் அகால மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

“இந்த எதிர்பாராத துயரச் சம்பவம் ஈரான் மக்களுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரைசி, அர்ப்பணிப்புள்ள இரக்கம் கொண்ட தலைவராக இருந்தார். ஈரான் மற்றும் இஸ்லாமிய உலகின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். ஈரானின் அரசியல், சமூக மற்றும் மத விவகாரங்களில் அவரின் பங்களிப்புகள் தலைமுறை தலைமுறையாக நினைவுகூரப்பட்டு போற்றப்படும்.

மேலும், பாலஸ்தீன மண்ணுக்காகவும் மக்களின் உரிமைக்காகவும் துணிச்சலுடன் செயலாற்றியதில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. சுதந்திர பாலஸ்தீனம் உருவாக வேண்டும் என்பதில், முன்னின்று உழைத்த, துணிச்சல் மிக்க முன்னணி அரசியல் தலைவராக விளங்கியவர்

அதேபோன்று, இலங்கையானது ஈரானின் மனிதாபிமான உதவிகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளது. எங்களுக்கு தேவைகளும், பொருளாதார பிரச்சினைகளும் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர். அந்த உதவிகளை நாம் இன்றும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறோம். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு எந்த சந்தர்ப்பத்திலும் வலுப்பெறும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கையை கொண்டிருக்கிறேன்.

“எந்தவோர் ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும்” என்ற நியதியின் படி, இந்த இழப்பையும் பொறுத்துக்கொண்டு ஆறுதல் அடைவோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# தலைவராக தெரிவு

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் மாவட்ட கராத்தே சம்மேளன தலைவராக மன்னார் கராத்தே பயிற்சி நிறுவன தலைவராக அன்ரனி இன்பராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கராத்தேயில் மாகாண மற்றும் மாவட்ட சம்மேளன தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது.

மேற்படி தேர்தலில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த தெரிவுக்குழுவின் மன்னார் விடத்தல் தீவை சேர்ந்த சீ கான் அன்ரனி இன்பராஜ் மன்னார் மாவட்ட கராத்தே சமமேளன நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# “மதுபானசாலைக்கு அனுமதி வேண்டாம்”

ரொசேரியன் லெம்பேட்

நானாட்டான் நகர பகுதிக்குள் எந்தவொரு மது பானசாலைக்கும் அனுமதி வழங்க வேண்டாமெனக் கோரிக்கை விடுத்து மத தலைவர்கள், பொதுமக்கள் இணைந்து நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை திங்கட்கிழமை(20) முன்னெடுத்திருந்தனர்.

நானாட்டான் விவசாய அமைப்பு பிரதிநிதிகள், மகளிர் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நானாட்டான் சுற்றுவட்டத்தில் இருந்து நானாட்டான் பிரதேச செயலகம் வரை கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நானாட்டானில் இந்து மற்றும் கத்தோலிக்க பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களில் மென் மதுபான விற்பனை நிலையம் காணப்படும் அதே நேரம் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் கள்ளுத்தவறணை காணப்படுவதாகவும் மென் மதுபான சாலையை உடனடியாக நிறுத்தும் படியும் அதே நேரம் நானாட்டான் ஒலி மடு பகுதியில் அமைந்துள்ள கள்ளுத்தவறணையை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.





குறித்த போராட்டத்தின் இறுதியில் பாடசாலைக்கு அருகில் இயங்கி வரும் மென் மதுபானசாலைக்கான அனுமதியை உடனடியாக நிறுத்த கோரியும் ஒலி மடு பகுதியில் இயங்கிவரும் கள்ளுத்தவறணையை இடம் மாற்றி தர வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கையளிப்பதற்கான மகஜர் நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகம்பிகையிடம் கையளிக்கப்பட்டது .

# பீடி லொறியை கடத்திய பொலிஸார் இருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் நகரில், ஞாயிற்றுக்கிழமை (19) இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பீடி இலைகளை ஏற்றிச் சென்ற லொறியை கடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் உட்பட மூவர் புத்தளம் தலைமையக பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பிரதேச போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸாரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இச்சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பீடி இலைகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றினை கடந்த 18ஆம் திகதி அதிகாலை வழிமறித்து அந்த லொறியையும் அதன் சாரதியையும் கொள்ளையர்கள் குறித்த பொலிஸாருடன், இணைந்து கடத்தி சென்றுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.



வேனில் வந்த கொள்ளையர்கள் சிலர் முதலில் பீடி இலைகளை கொண்டு வந்த லொறியின் சாரதியை கடத்திச் சென்று தாக்கி அவரிடம் இருந்த பணம் மற்றும் கைத்தொலைபேசிகளை கொள்ளையடித்து சாரதியை நிந்தனி பகுதியில் விட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

அதன் பின்னர் குறித்த லொறியை போக்குவரத்து பொலிஸார் இருவரின் உதவியில், கடத்திச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மரம் முறிந்து விழுந்தது

நவீ

தெல்தோட்டை உள்ளிட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை (20) இரவு முதல் கடும் மழை பெய்துவருகிறது.

தெல்தோட்டை நூல்கந்துர மாணிக்க தோட்ட பகுதியில் உள்ள வீட்டுக்கு மேல் பாரிய மரமொன்று முறிந்து விழுந்துள்ளது , இதனால் வீட்டு கூரை மற்றும் சில பொருட்களும் சேதமாகியுள்ளன, வீட்டில் இருந்தவர் தெய்வாதீனமாக உயிர் தப்பித்துள்ளனர்,

கடுமையான மழை காரணமாக அப்பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.



# அரசியல் நிறக் கண்ணாடிகள் அணியாது பகுத்தறிவுடன் செயற்படவும்

இலங்கையில் பாடசாலை மாணவர்கள் 600,000 பேர் காலை உணவின்றி பாடசாலைக்கு வருவதாக பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான பாராளுமன்ற முறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான குழுவில் இருந்து தெரியவந்துள்ளது.

வரலாறு, ஆச்சரியப்படத்தக்க வகையில், மீண்டும் மீண்டும் நடந்தது. பாடசாலை மாணவர்கள் 6 லட்சம் பேர் காலை சிற்றுண்டி இல்லாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்ற அறிக்கை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அசௌகரியம் மற்றும் விரக்தியை உருவாக்குவதால் இந்த சூழ்நிலையை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் பாடசாலைக்கு பிள்ளைகளின் வருகை அதிகரித்துள்ளது என்பது பாராளுமன்ற முறைகள் மற்றும் நடைமுறைகள் குழுவில் தெரியவந்துள்ள மற்றுமொரு விசேட உண்மையாகும்.

இதிலிருந்து நாம் இரண்டு முடிவுகளை எடுக்கலாம். முதலாவதாக, சில மாணவர்கள் பாடசாலைக்கு வருவதற்கு போதுமான ஆற்றல் இல்லாததால் பாடசாலைக்கு வருவதில்லை. இரண்டாவது விஷயம், சத்துணவுத் திட்டம் அமலுக்கு வந்த பிறகு, பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது என்றால், அந்த மாணவர்கள் பாடசாலைக்கு கற்க அல்ல, பசியை போக்கவே வருகின்றனர். மேற்கூறிய இரண்டு முடிவுகளின் மூலம் இந்த நாட்டில் குழந்தை எதிர்கொள்ளும் அவலத்தை விளக்க முடியும்.

தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் இந்த தங்கத் தீவின் தலைவிதி மிகவும் சோகமானது. நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்த அயோக்கியர்கள் யார் என்று ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டு இந்த விதியை மாற்ற முடியாது. கேள்விக்கு விரைவான பதில் தேவை. அரசியல் நிறக் கண்ணாடிகள் அணியாமல், கூட்டுப் பகுத்தறிவுடனும், பெரிய மனித ஆர்வத்துடனும், பிரச்சனையைப் பார்த்தால், விரைவான பதில்களை உருவாக்குவது கடினம் அல்ல.

'உலகில் சிறந்தவை குழந்தைகளுக்கானது' என்பது நாகரிக சமுதாயத்தில் மிகவும் உயர்ந்த கருத்து. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நம் குழந்தைகள் உலகின் மிக மோசமான விஷயத்திற்கு எளிதில் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தக் குழந்தை நாட்டின் எதிர்காலத்தை கையில் எடுக்கப் போகிறது. அந்தச் சூழ்நிலையில், நாட்டின் எதிர்காலம் குறித்து நமக்கு நம்பிக்கை இருக்க முடியுமா என்று பெரியவர் யோசிக்க வேண்டும்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மட்டுமன்றி, பலரும் மூவேளையில் இரண்டொரு வேளைக்கு சத்துணவை உண்பதில்லை. கிடைப்பதை வைத்து வயிற்றை நிரப்பிக்கொள்கின்றனர். நேரத்துக்கு ஏதாவது சாப்பிடவேண்டும் என்ற மனநிலையிலேயே இருக்கின்றனர். சத்துணவைதான் உண்ணவேண்டும் என்பதை மறந்தே விடுகின்றனர். இதனால், பலரும் நோய்வாய்ப்பட்டு உள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாரிய தாக்கத்தை அடுத்தே இவ்வாறான நிலைமைக்குள் மக்கள் தள்ளப்பட்டனர். சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய ஏனைய தேவைகளை மறந்து, உணவுக்காக மட்டுமே வேலைக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அவ்வாறானவர்கள் நாட்டின் எதிர்காலத்துக்கு பெரும் சுமையாகவே இருப்பர். என்பதால், மேலே குறிப்பிட்ட உணவு விவகாரத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டைதீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இழப்பீடு வழங்குமாறு கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் கடந்த பெரும் போக நெற் செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குமாறு விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு மகஜரரும் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும், கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தினால் மாவட்டத்தில் அறுவடை செய்யப்படவிருந்த வேளாண்மை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி நிலையத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று பாதிப்பு தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகளை விரைவாக வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.ஹனீபா

## முஸ்லிம் அரசியல்வாதிகளால்

# நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்

மொஹமட் பாதுஷா

'இலகுவில் செய்ய முடியாத காரியங்களை செய்து முடிக்கின்ற கலையே அரசியல்' என்று சொல்வார்கள். ஆனால், செய்யக் கூடியவற்றைக் கூட சாதிக்காமல் விட்டுவிடுகின்ற, சாத்தியமற்ற காரியங்களை செய்து காட்டுவோம் என்று அறிக்கை விடுகின்ற அரசியல்வாதிகளையே நாம் அதிகமாகக் காண்கின்றோம்.

ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு அல்லது ஒரு வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முழு மூச்சாக செயற்படாமல், தசாப்தங்கள் கடந்தும் இன்னும் வெறுமனே வாயால் வடைசுட்டுக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் தலைவர்கள், எம்.பி.க்களையே அதிகளவில் காண முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் ஒப்டோபரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருப்பினும், அரசியலில் எதுவும் எந்த நொடியிலும் நடக்கலாம் என்ற நிலைமைகள் இன்னும் மாறவில்லை. அந்த அடிப்படையில், பெருந்தேசியக் கட்சிகள் ஒரு திட்டத்தையும் இன்னுமொரு மாற்றுத் திட்டத்தையும் வைத்திருக்கின்றது. முஸ்லிம் கட்சிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

பொதுவாகவே முஸ்லிம் அரசியல்வாதிகள் தாம் மக்களுக்கு ஆற்றிய சேவைகளைச் சொல்லி வாக்குக் கேட்க முடியாத பெரும் கையறு நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இதனால் தேர்தல் காலத்தில் சில கருவிகளை கையில் எடுக்கின்றார்கள். கடந்த கால்நூற்றாண்டாக இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது.

எதிர் தரப்பு முஸ்லிம் கட்சிகளை வசைபாடுதல், இனவாதத்திக்கு எதிரான கருத்துக்களை பேசி மக்களை உணர்ச்சி ஊட்டுதல், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் பற்றி ஆக்ரோசமாகப் பேசுதல் எனத் தொடங்கி கட்சி கீதங்களை ஒலிக்க விடுதல் தொட்டு, அனுதாபம் தேடுதல் வரை அந்த கருவிகள் பல விதமாக உள்ளன.

மிக முக்கியமாக, தங்களால் செய்யவே முடியாது என்று தெரிந்த காரியங்கள் குறித்த வாய்ச் சவாடல்களை விடுகின்றனர். புதுப்பிக்கப்பட்ட பொய்களை திரும்பத் திரும்ப கூறுகின்றனர். நடைமுறைச் சாத்தியமற்ற அல்லது கற்பனைக்கு எட்டாத அபிவிருத்தி திட்டங்கள் குறித்து அறிக்கை விடுகின்ற காமடி அரசியல்வாதிகளும் உள்ளனர்.

முஸ்லிம் சமூகம் என்பது தனியான ஒரு தேசிய இனமாகும். ஏனைய சமூகங்களுடன் பல சம பண்புகளை பகிர்ந்து கொண்டாலும் பிரத்தியேகமான கலாசாரப் பின்னணியும். சமூகப் பிரச்சினைகளும் முஸ்லிம்களுக்கும் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களின் இலட்சக்கணக்கான ஹெக்டேயர் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் 30 வருடங்களுக்கும் மேலாக தீர்க்கப்படாது கிடப்பில் கிடக்கின்றன. குறிப்பாக கிழக்கில் சனத்தொகையின் பாதியளவுக்கு கூட முஸ்லிம்களுக்கு காணி இல்லாதிருக்கின்ற சூழலில், புதிதுபுதிதாக காணிப் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

அதுமட்டுமன்றி, யுத்தகாலத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் ஏனைய படைகளாலும் முஸ்லிம்கள் எதிர்கொண்ட இழப்புக்கள், உரிமை மீறல்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. கடத்தல்கள், கப்பம் பறிப்புக்கள், காணாமல்போதல்கள், கொலைகள் பற்றிப் பேசுவதற்கோ, அதற்கான நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவோ முஸ்லிம் அரசியல்வாதிகள் பாடுபடவில்லை.

அதேபோன்று, வடக்கு, கிழக்கு வெளியில் உள்ள முஸ்லிம்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் ஏனைய சமூகங்களோடு பின்னிப் பிணைந்து வாழ்கின்ற நிலையில், இனவாதம் மேலோங்கும் காலங்களில் அகப்பட்டுக் கொள்கின்றார்கள். இது தவிர கொழும்பு போன்ற இடங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு இடம், குடியிருப்பு, வாழ்வாதார பிரச்சினைகள் உள்ளன. இவை தனித்தனியாக அணுகப்பட வேண்டியவை.

நிலைமை இவ்வாறிருக்க, முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் அதிலும் விசேடமாக தனித்துவ அரசியல் கட்சிகளின் தலைவர்கள், எம்.பிக்கள் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு காத்திரமான, உருப்படியான நடவடிக்;கைகளை எடுக்காமல்;, இன்னுமின்னும் அபிவிருத்தி மாயையை காட்டியும் 'பிரச்சினைகளை தீர்ப்போம்' என பொய் வாக்குறுதி வழங்கியும் காலத்தை கடத்த முயற்சிக்கின்றமை கண்கூடு.

கடந்தகால தேர்தல் மேடைகளில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், தளபதிகள் வழங்கிய வாக்குறுதிகள், பேசிய விடயங்களை மீளவும் செவிமடுத்தால் அவ்வாறான வாக்குறுதிகள் எவை எனப் புரியும். முஸ்லிம் கட்சிகளின் விஞ்ஞாபனங்கள், துண்டுப்பிரசுரங்களை புரட்டிப் பார்த்தால் ஏமாற்றத்தின் பருமனையும் விளங்கிக் கொள்ளலாம்.

காணிப் பிரச்சினைகளில் 10 வீதமானவற்றைக் கூட இத்தனை முஸ்லிம் எம்.பிக்களும் தீர்த்து வைக்கவில்லை. அரச உயர் பதவி நியமனங்களில் முஸ்லிம்களிற்கு உரிய பங்கை பெற்றுக் கொடுக்கவில்லை. யாழ். முஸ்லிம்கள் வெளியேற்றம் உள்ளடங்கலாக மனித உரிமை மீறல்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

ஒலுவில் துறைமுகத்தை செயற்றிறனாக இயங்க வைக்கவில்லை. அஷ்ரப் நகர் பிரச்சினையை முற்றாக தீர்க்கவில்லை. ஒலுவில் துறைமுகத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுக்க இன்னும் முறையான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை. சவூதி அரசாங்கத்தால் நுரைச்சோலை எனும் இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க இயலவில்லை.

சாய்ந்தமருது மக்களுக்கு தனியான உள்ள10ராட்சி சபையை பெற்றுக் கொடுப்போம் என்று மாறி மாறி வாக்குறுதி வழங்கினார்கள். இது விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இடையே 'நீயா நானா போட்டி' ஏற்பட்டதால், அது இன்னும் சாத்தியமாகவில்லை. கல்முனை உப பிரதேச செயலக பிரச்சினையும் ஊதிப் பெருப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் உள்ளடங்கலாக வடக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளில் பெரிய முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகளும் அப்படியேதான் கிடக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், இன மேலாதிக்கத்தால் நசுக்கப்படுகின்ற முஸ்லிம்களின் கதை தொடர் கதையாகவே இருக்கின்றது. இவ்வாறு தீர்;க்கப்பட வேண்டிய விவகாரங்கள் ஒருபுறமிருக்க, கற்பனைத்தனமான அபிருத்தி திட்டங்களை அறிவிப்பதில் பல முஸ்லிம் எம்.பி.;க்கள் வாய்ச்சொல்லில் மட்டும் வல்லவர்களாக இருப்பதை காண முடிகின்றது.

அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்க முடியாதவர்கள், முழுச் சமூகத்திற்கும் பயன்படக் கூடிய தூரநோக்கான அபிவிருத்தியைச் செய்ய முடியாத முஸ்லிம் அரசியல்வாதிகள், சிறு பிள்ளைகளை 'நிலவுக்கு கூட்டிச் செல்வோம்' எனக் கூறி ஆசுவாசப்படுத்தும் பெற்றோரைப் போல, கற்பனைக்கு கூட எட்டாத அபிவிருத்திகளை மேற்கொள்வோம் என பலமுறை அறிவித்திருக்கின்றார்கள்.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளால் நிறைவேற்ற முடியாத நிறைய வாக்குறுதிகளை தேர்தல் காலத்தில் வழங்கி, முஸ்லிம் சமூகத்தை உணர்ச்சியில் மெய் சிலிர்க்க வைத்திருக்கிறார்கள், இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் எம்.பி.க்களும் முதலிடம் பெறுகின்றனர் எனலாம்.

'கல்முனை நகரை ஒரு துபாய் போல' மாற்றுவோம் என்றார்கள். 'கடல்நீரை குடிநீர் ஆக்குவோம்' என்றார்கள். இப்படி அவர்கள் கூறிய திட்டங்கள் ஏராளமானவை. அவற்றில் ஒரு சிலவற்றையேனும் செய்திருந்தால் கூட, கிழக்கு மாகாணம் கிழக்கில் பாரிய அபிவிருத்தி புரட்சியொன்று ஏற்பட்டிருக்கும்.

காணிப் பிரச்சினையை தீர்ப்போம், உரிமைகளைக் காக்க போராடுவோம் என்று முஸ்லிம் அரசியல்வாதிகளை கூறியதைக் கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், தங்களால் செய்ய முடியாது என்று தெரிந்திருந்த இமாலய செயற்றிட்டங்களை அறிவித்ததைதான் ஏற்றுக் கொள்ள முடியாது.

முஸ்;லிம் சமூகத்தையும். மக்களையும் எந்தளவுக்கு முட்டாள்கள் என்று குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் மனதில் கணக்குப்போட்டு வைத்திருக்கின்றார்கள் என்பதற்கு மேற்குறிப்பிட்ட அறிவிப்புக்கள் நல்ல பதச் சோறுகளாகும்.

இப்போது, கல்முனையில் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அருங்காட்சியகத்தை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட:;டுள்ளது. மறைந்த தலைவர் அஷ்ரபின் வாழ்வும் அவர் சார்ந்த விடயங்களும் அடுத்த தலைமுறைக்காக காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற வகையில் இது மகிழ்ச்சியே.

ஆனால், இது முழு;யாக செய்து முடிக்கப்படுமா அல்லது துபாய், கட்டார் கதைகளை போல ஆகிவிடுமா என்பது முதலாவது கேள்வி.

அடுத்த விடயம். ஜனாதிபதி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பெருமையடிக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஏள் கடந்த காலத்தில் மக்களுக்கு வாக்குறுதியளித்த செயற்றிட்டங்களை நிறைவேற்றிக் காட்டவில்லை?

குறைந்தபட்சம் அஷ்ரபின் ஒலுவில் வாசஸ்தலத்தை பராமரிக்கவில்லை. அவர் நினைவாக நிந்தவூரில் கட்டப்பட்டு அரையும் குறையுமாக கிடக்கின்ற கட்டிடத்தின் பணிகளை நிறைவு செய்யவில்லை. ஒலுவில் துறைமுகம் உள்ளிட்ட தலைவரின் கனவை வெற்றிகரமாக்க முன்னிற்கவில்லை.

அஷ்ரப் அருங்காட்சியகத்தை அமைக்கும் பணியை ஏன் முஸ்லிம் காங்கிரஸ் எம்பி. க்கள் இது காலவரை தமது நிதியில் செய்யவில்லை? அதுமட்டுமன்றி, மறைந்த தலைவரை காட்சிப்படுத்த நினைக்கின்ற, அவரை இன்று வரை தேர்தல்கால முதலீடாக பயன்படுத்துகின்ற முஸ்லிம் எம்பிக்கள் ஏன் அவரது கொள்கைகளை சரிவரக் கடைப்பிடிக்கவில்லை எனக் கூறுவார்களா?

ஆகவே மக்களை நம்ப வைத்து வாக்குகளைப் பெறுவதற்காக, எவ்வாறான கதைகளை, போலி வாக்குறுதிகளை கூறலாம்; என்பது அரசியல்வாதிகளுக்கு தெரியும்;. ஆனால், மக்கள்தான் பாவம் - தேர்தல் வந்தால் அதனையெல்லாம் மன்னித்து, மீண்டும் ஒருமுறை ஏமாறுவதற்கு தம்மை தயார்படுத்திக் கொள்கின்றார்கள்.

### இலங்கையின் முதல் குடியரசு அரசியற் சட்டம்:

# தமிழருக்கு அரசியல் சட்ட நீதியை வழங்கியதா?

கலாநிதி. சந்திரசேகரம் பரமலிங்கம். சட்டத்தரணி, லண்டன்

இலங்கை, சுதந்திர இறைமையுடைய குடியரசாக 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்டது. பிரகடனம் செய்யப்பட்டு 52 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இவ்வரசியலமைப்பின் அரசியல் சட்டப் பின்னணி நம் ஆய்வுக்குரியது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி அமலாக்கப்பட்ட சோல்பரி அரசியல் சட்டம் பற்றிய விமர்சனங்கள் அதன் ஆரம்பத்திலிருந்தே முன்வைக்கப்பட்டிருந்தன.

இவற்றினுள் முதன்மையானது இவ்வரசியற்சட்டம் சட்டத்துறையினது சட்ட ஆக்க அதிகாரங்கள் மீது விதித்திருந்த வரையறைகள் பற்றியதாகும். 1948 ஆம் ஆண்டிலிருந்து 1970 வரையிலான இரு தசாப்தங்களில் பிரித்தானியாவினது பிரிவுக்கவுன்சிலின் முன் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்களை உற்று நோக்குவது அவசியமானது. " இலங்கைப் பாராளுமன்றத்திற்கு குறித்த விடயத்தில் சட்டம் ஆக்கும் அதிகாரம் இல்லாமையால், அதனால் ஆக்கப்பட்ட சட்டம் செல்லுபடியாகாது" என்று பிரிவி கவுன்சில் தீர்ப்புக் கூறியது. " இலங்கைப் பாராளுமன்றம் அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு அமைய ஆக்கப்பட்டதாக சபாநாயகரால் அத்தாட்சிப் படுத்தப் படவில்லை " என்றும் பிரிவுகவுன்சில் தெரிவித்தது.

1965 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்கா தலைமையிலான கூட்டணி அரசாங்கம் முன்னெடுத்த முதல் சட்ட ஆக்க நடவடிக்கைகளில் ஒன்று, நியாயமான தமிழ் மொழி உபயோக மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த மையாகும். இம்மசோதாவிற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பௌத்த பிக்குகளும் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள், பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸாரது துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகும் அளவிற்கு வலுத்திருந்தது.

இவ்வாறான அரசியல் பின்புலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளை உள்ளடக்கிய அரசியல் முன்னணி 1970 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது புதிய குடியரசு அரசியற் சட்டத்தையும், பௌத்த சமயத்திற்கு முதன்மை என்ற இரண்டையும் முன்வைத்தது. இவற்றிற்கு பௌத்த சிங்கள முலாமும் தொழிலாளர் வர்க்கத்தினரை திருப்திப்படுத்துவதற்காக சோசலிச வேலைத்திட்டங்களும் இம் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

சிங்கள மொழிப் பிராந்தியங்களில் மேற்கண்டவாறான அரசியல் சூழ் நிலை நிலவுகையில், தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சி சமஷ்டி ஆட்சி முறையிலான அரசியல் சட்ட நீதியைக் கோரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்தது.

1970 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகளின் வரைபடம் இலங்கைத் தீவில் இரு மொழிப் பிராந்தியங்களை உள்ளடக்கிய இரு மொழி பேசும் தேசிய இனங்களின் குடிப்பரம்பலை வெளிப்படுத்தி நின்றது.

1947 ஆம் ஆண்டு பிரித்தானிய பொது மக்கள் சபையில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் மசோதா விவாதிக்கப் பட்ட வேளையில்,

இலங்கை இரு மொழி பேசும் வலயங்களைக் கொண்ட நாடு என்றும் அங்கு ஒற்றை ஆட்சி முறை அறிமுகப்படுத்துவது ஜனநாயக ஆட்சி முறை தோல்வியடையவே வழிவகுக்கும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையை இல்லாதொழிக்க அரசியல் அதிகாரத்தை சுவீகரித்துக் கொள்ளும் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மீதுள்ள பாரிய பொறுப்புக்களைச் சுட்டிக்காட்டி, தமிழர்களுக்கு நியாயமான நிலைக்கும் மேலாக நாட்டின் நிருவாகத்தில் பங்களிக்கப்பட வேண்டும் என்ற காரணங்களும் வலியுறுத்தப்பட்டன.

அமைச்சர் கொல்வின் ஆர்.டி.சில்வாவினால் வரையப்பட்டு, அரசியல் அமைப்பு நிர்ணய சபையிலும் மக்கள் பிரதிநிதிகள் சபையிலும் அங்கீகாரம் பெறப்பட்டு, 1922 ஆம் ஆண்டு மே மாதம் பிரகடனப்படுத்தப்பட்ட அரசியல் சட்டம் இலங்கைத் தீவைக் குடியரசு ஆக்கியது

இலங்கை ஒற்றையாட்சி அமைப்பு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் தேசியப் பேரவை அரசின் சட்ட சபையாக அறிவிக்கப்பட்டு, அரசின் நிர்வாகத்துறையும் நீதித் துறையும் முன்னையதின் அதிகாரங்களுக்கு கீழ்ப்பட்ட இரண்டாம் தர நிலைக்குத் தள்ளப்பட்டன.

இந்த ஏற்பாடு சட்டவாக்கத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை என்பவற்றிற்கிடையிலான சம நிலையினைக் குலைத்தது. மக்கள் இறைமை பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டிற்கு முதலிடம் வழங்கியது. முந்தைய அரசியற் சட்டம் கொண்டிருந்த பொது சேவைகள் ஆணைக்குழு, நீதி சேவைகள் ஆணைக்குழு என்றிருந்த ஆணைக்குழுக்கள் அகற்றப்பட்டன.

அவற்றிற்குப் பதிலாக பின்வரும் நான்கு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

1. நிருவாக சேவை ஆலோசனைச் சபை.
2. நிருவாக சேவை ஒழுங்காற்றுச் சபை.
3. நீதி சேவை ஆலோசனைச் சபை.
4. நீதி சேவை ஒழுங்காற்றுச் சபை.

பாராளுமன்றத்தின் அதிகாரம் ஓங்கியிருக்கக் கூடிய விதமாக இந்த நான்கு சபைகள் நிறுவப்பட்டன. ஒட்டு மொத்தமாக இவ்வரசியற் சட்டத்தை அவதானிக்கையில் பின்வரும் முக்கிய அம்சங்கள் நம் கவனத்திற்குள்ளாகின்றன.

இலங்கையின் பாராளுமன்றம் ஓரங்க சட்டத்துறையாக தேசிய மக்கள் பேரவை நிறுவப்பட்டது. இப் பேரவையின் மசோதாக்களது சட்டங்கள் செல்லுபடியனவையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு, இதற்கென சிறப்பாக உருவாக்கப்பட்ட அரசியற் சட்ட நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றங்களுக்கும் பாரப்படுத்தப் படவில்லை.

1956 ஆம் ஆண்டின் சிங்கள உத்தியோக மொழிச் சட்டத்திற்கு அரசியற் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டு, இதன் திருத்தம் மாற்றம் என்பவற்றிற்கு 2/3 பெரும்பான்மை பலம் சேர்க்கப்பட்டது.

சிங்கள மொழி உத்தியோகச் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்ட வேளையில், 'ஒரு மொழி இரு நாடு; இரு மொழி ஒரு நாடு எனப் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்த கொல்வின் ஆர்.டி.சில்வா, 1972 ல் அரசியற் சட்ட விவகார அமைச்சராக இருந்து அரசியற் சட்டம் இயற்றியமையை தமிழ் மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பர்.

ஆனால், இவ்வரசியல் சட்டம் ஆறு வருடங்கள் மட்டுமே நீடித்திருந்தது.

1952 ஆம் ஆண்டிலிருந்து சமஷ்டி அரசியல் அமைப்பு, தன்னாட்சி போன்ற கோரிக்கைகளை முன் வைத்த சமஷ்டிக் கட்சி 1956 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டின் பின்னரும் தமிழர் தாயகத்தில் அதிகப்படியான தொகுதிகளில் வெற்றி பெற்று தமிழர் தலைமையைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் QC அவர்கள், 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அரசியலமைப்பு நிர்ணய சபையில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியற் சட்ட வரைவிற்குப் பின்வரும் திருத்தங்களை சமர்ப்பித்திருந்தார்.

1. இலங்கை ஒரு சமஷ்டிக் குடியரசாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

2. சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாக்கப்பட வேண்டும்.

3. இலங்கை 5 சமஷ்டி அலகுகளாக்கப்பட்டு அவற்றில் மூன்று கண்டி, கொழும்பு, தென்னிலங்கை என்று அறிவிக்கப் படவேண்டும். வட கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கான சமஷ்டி அலகும் தென் கிழக்கில் முஸ்லிம்களுக்கான சமஷ்டி அலகும் உருவாக்கப்பட வேண்டும்.

4. பொருளாதார வளர்ச்சி பற்றிய வேலைத்திட்டங்கள் வரையறை செய்யப் படவேண்டும்.

5. போதனா மொழி, அரசின் பொருளாதார சமூக நலக் கொள்கைகள் என்பன அரசியற் சட்டத்தில் இணைக்கப் படவேண்டும்.

எவ்வாறாயினும் முஸ்லிம் மக்களுக்காக கோரப்பட்ட சமஸ்டி அலகை முஸ்லிம் லீக் நிராகரித்தது. இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாக தொடர்ந்தும் விளங்க வேண்டுமென்றும் இந்தியாவின் அரசியல் சட்டத்தில் முஸ்லிம்களது உரிமை உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது போன்று இலங்கையின் புதிய அரசியற் சட்டத்திலும் பாது காக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தது.

தமிழ் தேசிய இனத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியினால் முன்மொழியப்பட்ட எந்த ஒரு பிரேரணையும் அரசியல் நிர்ணய சபையினால் ஏற்கப்படவில்லை. இந்நிலையில் தந்தை செல்வநாயகம் அவரது கட்சியின் உறுப்பினர்களுடன் அரசியற் சட்ட நிர்ணய சபையிலிருந்து வெளியேறு முன்னர் ஆற்றிய உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

" எமது கட்சியின் சார்பில் எமது மொழியுரிமை தொடர்பான சட்ட சரத்துக்களை முன் மொழிந்தோம். இந்த முக்கியமான காலகட்டத்தில் எமது மொழியுரிமை அரசியற் சட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும் என்பதன் நியாயத்தன்மையை எவரும் மறுக்க முடியாது. நாம் அரசியற் சட்டத்தின் தன்மை, அடிப்படை உரிமைகள் பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் தொடர்பான பல திருத்தங்களைச் சமர்ப்பித்தோம். இவை யாவும் பெரும்பான்மை சமூகப் பிரதிநிதிகளாகிய உங்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் எமது மொழியுரிமை உட்பட சகல உரிமைகளுக்கும் உத்தரவாதமற்ற நிலையிலும் இச் சபையின் நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு கொள்ளுதல் என்பது பயனற்றது. இந்த முடிவு எடுப்பதனால் உங்கள் எவரையும் புண்படுத்த விரும்பவில்லை. எமது மக்களது கௌரவத்தை பாதுகாக்கவே விரும்புகிறோம் ".

இதன் பின்னர் தமிழரசுக் கட்சி அரசியற் சட்ட நிர்ணய சபை நிகழ்ச்சிகளில் இருந்து விலகிக் கொண்டது.

இவ்வாறான பின்னணியில் தமிழர்களது கோரிக்கைளை நிராகரித்து இலங்கையின் முதலாவது அரசியற் சட்டம் தமிழர்களுக்கான அரசியற் சட்ட நீதியை மறுத்தது. இதன் தொடரச்சி கடந்த அரை நூற்றாண்டுகளாக நீடித்துச் செல்கிறது. நீதிக்கான வழிவகைகள் மூடப்பட்ட இனமாகவும், தொடர்ந்தும் உள்ளூர் குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்ட மக்களாகவும் தமிழ் மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் இந்த அவல நிலைக்கு அத்திவாரம் இட்டுச் சென்ற போர்த்துகல், ஒல்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய மூன்று குடியேற்ற நாடுகளும் தமிழர்கள் விடுதலையும் நீதியும் அடையும் வரை இந்த உள்ளூர் மோதலின் பங்காளிகளே என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும்.




# டாட்டூனில் கலக்கும் அஜித்

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் குட் பேட் அக்லி அறிவிப்பு வெளியானது.

மேலும் அப்போதே படம் அடுத்த வருடம் பொங்கலுக்கு வெளியாகும் என்ற அறிவிப்பையும் படக்குழு வெளியிட்டு இருந்தது. அதைத்தொடர்ந்து படப்பிடிப்பும் ஹைதராபாத்தில் தொடங்கியது.

ரசிகர்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கும் வகையில் தற்போது ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி இருக்கிறது. அதில் அஜித் சால்ட் அண்ட் பெப்பர் லுக்கில் அசத்தலாக இருக்கிறார்.

மூன்று தோற்றத்தில் கலர் கண்ணாடி, டாட்டூ என அவரின் தோற்றமே வேற லெவலில் இருக்கிறது. ஏற்கெனவே இப்படத்தில் அவர் மூன்று விதமான குண நலன்கள் கொண்டவராக நடிக்கிறார் என கூறப்பட்டது.



# கங்கனா ரனாவத் அதிரடி

நடிகை கங்கனா ரனாவத், நடந்துவரும் மக்களவைத் தேர்தலில் இமாசல பிரதேசத்தின் மண்டி தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடுகிறார். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால், சினிமாவில் இருந்து விலகிவிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் அளித்துள்ள பேட்டியில், "திரையுலகம் பொய்யானது. அங்கு எல்லாமே போலிதான். பார்வையாளர்களைக் கவர்வதற்காகப் பொய்யான உலகை உருவாக்குகிறார்கள். இதுதான் யதார்த்தம். நான்உணர்ச்சி வசப்படும் நபர். அதனால்தான் நடிப்பு போரடித்தால் கதை, இயக்கம், தயாரிப்பு என்று சென்றுவிடுகிறேன்.

இப்போதுஅரசியலுக்கு வந்துவிட்டேன். மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்றால் நடிக்க வேண்டிய படங்களை முடித்துவிட்டு சினிமாவுக்கு முழுக்கு போட்டு விடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ஐஸ்வர்யாராய்க்கு அறுவை சிகிச்சை?



பிரான்ஸ் நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் கேன்ஸ் திரைப்பட விழா இந்த ஆண்டு கடந்த 14-ம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 25-ம் திகதி வரை நடைபெறுகிறது.

இதில் முன்னாள் உலக அழகியும், பாலிவுட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய், பிரத்யேக உடைகள் அணிந்து ஒய்யாரமாக சிவப்புக் கம்பளத்தில் நடந்து பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தார். அவருடன் அவரது மகள் ஆராத்யா பச்சனும் இருந்தார். இந்த முறை ஐஸ்வர்யா ராய் கையில் மாவுக்கட்டு போட்டிருந்தார்.

அந்த புகைப்படம் வலைதளத்தில் வைரலானதை பார்த்த ரசிகர்கள் அதிர்ச்சியானார்கள். ஐஸ்வர்யா ராய்க்கு என்ன ஆனது என்று கேள்விகள் எழுப்பினர். விரைவில் குணமாக வேண்டியும் பதிவுகள் வெளியிட்டனர்.

ஐஸ்வர்யா ராய்க்கு விபத்தில் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருப்பதாக கூறப்பட்டது. கட்டுப்போட்ட கையுடனேயே வித்தியாசமான உடையில் கேன்ஸ் திரைப்பட விழாவில் பங்கேற்றார்.

# ஜாக்கி ஷெராப் குரலுக்கு தடை

பாலிவுட் நடிகர் ஜாக்கி ஷெராப் தமிழிலும் 'ஆரண்ய காண்டம்', 'பிகில்', 'ஜெயிலர்' உள்ளிட்டப் பல படங்களில் நடித்துள்ளார். இவர் தனது பெயர், படங்கள், குரல் என எதையும் தன்னுடைய அனுமதியின்றி பயன்படுத்த கூடாது என்று புதுடெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை நீதிபதி சஞ்சீவ் நருலா தலைமையிலான அமர்வு விசாரித்து ஜாக்கி ஷெராப்புக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பித்து உள்ளது. ஜாக்கி ஷெராப்பின் தோற்றம், குரல், புகைப்படம், பெயர் உள்ளிட்ட கூறுகளை பயன்படுத்த தடை விதித்ததுடன் ஒரு வாரத்துக்குள் வர்த்தக பயன்பாட்டில் இருந்து அவற்றை நீக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. வழக்கு விசாரணை ஒக்டோபர் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டு உள்ளது.

அனுமதி பெறாமல் தனது குரல், உருவம், பெயர் போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது என்று நடிகர் ரஜினிகாந்த் சட்ட ரீதியாக எச்சரிக்கையை ஏற்கெனவே விடுத்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# 'டூன்' தொடரில் தபு

இந்தி நடிகை தபு, தமிழில், காதல் தேசம், இருவர், தாயின் மணிக்கொடி, கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் உட்பட சில படங்களில் நடித்துள்ளார். இவர் இந்தியில் நடித்து சில மாதங்களுக்கு முன் வெளியான 'க்ரூ' வரவேற்பைப் பெற்றது. இந்நிலையில் இவர் ஹாலிவுட்டில் உருவாகும் 'டூன்: புரோபெசி' (Dune: Prophecy) என்ற அறிவியல் புனைகதை தொலைக்காட்சி தொடரில்நடிக்கிறார்.

டெனிஸ் வெல்லுனவ் இயக்கத்தில் வெளியான 'டூன்: பார்ட் 2' படத்தின் முன் கதையாக, இந்த 'டூன்: புரோபெசி' உருவாகிறது. மனிதகுலத்தின் எதிர்காலத்தை அச்சுறுத்தும் சக்திகளை எதிர்த்து போராடும் இரண்டு சகோதரிகளைப் பற்றிய கதையில் சிஸ்டர் பிரான்செஸ்கா என்ற பாத்திரத்தில் தபு நடிக்கிறார். எமிலி வாட்சன், ஒலிவியா வில்லியம்ஸ், டிராவிஸ் ஃபிம்மல், ஜோதி மே, மார்க் ஸ்ட்ராங், சாரா-சோஃபி பௌஸ்னினா, ஜோஷ் ஹூஸ்டன் உட்பட நடிக்கின்றனர்.



இதில் நடிக்கும் தபுவுக்கு சமூக வலைதளங்களில் ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# 'கல்கி 2898 ஏடி' யில் கீர்த்தி சுரேஷ்



நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கும் படம், 'கல்கி 2898 ஏடி'. அறிவியல் புனைகதை படமான இதில் அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி என பலர் நடிக்கின்றனர். சந்தோஷ்நாராயணன் இசை அமைக்கிறார். வைஜெயந்தி மூவிஸ் தயாரித்துள்ள இந்தப் படம் ஜூன் 27-ல் வெளிவர இருக்கிறது. இந்நிலையில் இந்தப் படக்குழு காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில்,பைரவாவின் (பிரபாஸ்) சிறந்த நண்பர் புஜ்ஜியை வரும் 22-ம் திகதி அறிமுகப்படுத்துகிறோம் என்று தெரிவித்துள்ளனர். இந்தப் படத்தின் 5-வது சூப்பர் ஸ்டாரான புஜ்ஜி,சிறிய வகை பேசும் ரோபோ. இந்த ரோபோவுக்கு கீர்த்தி சுரேஷ் குரல் கொடுத்துள்ளார். அவர் குரல் ரோபோவுக்கு சிறப்பாக பொருந்தி இருப்பதாக ரசிகர்கள் கூறி வருகின்றனர்.




ஈரான்

ஈரான் ஜனாதிபதி ரைசி மரணம்:

# இடைக்கால ஜனாதிபதி மொக்பர்

ஈரானின் இடைக்கால ஜனாதிபதியாக அந்நாட்டின் முதல் துணை ஜனாதிபதியான முகமது மொக்பர் பதவியேற்க உள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியான நிலையில், விபத்து நடந்து 17 மணி நேரத்திற்கு பிறகு ஹெலிகொப்டரின் உடைந்த பாகங்கள் கண்டறியப்பட்டன. மேலும், அதில் பயணித்த எவரும் பிழைக்க வாய்ப்பில்லை எனவும், சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மூடுபனி காரணமாக குறித்த விபத்து ஏற்பட்டதாக தெரியவந்ததையடுத்து, அவரின் மறைவுக்குப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இப்ராஹிம் ரைசி இறந்ததைத் தொடர்ந்து, அரசியலமைப்பின் அடிப்படையில், ஈரானின் இடைக்கால ஜனாதிபதியாக அந்நாட்டின் முதல் துணை ஜனாதிபதியான முகமது மொக்பர் பதவியேற்க உள்ளார்.

இவர், பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் உச்ச நீதித்துறை தலைவர் ஆகியோருடன் இணைந்து, அடுத்த 50 நாட்களுக்குள் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

செப்டம்பர் 1> 1955இல் பிறந்த மொக்பர், மறைந்த ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியைப்போலவே, நாட்டின் அனைத்து விடயங்களிலும் பேசப்படும் உச்ச தலைவர் அலி கமேனிக்கு நெருக்கமானவராகக் காணப்படுகிறார்.

மேலும், 2021இல் இப்ராஹிம் ரைசி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது மொக்பர் முதல் துணை ஜனாதிபதி ஆனார். கடந்த அக்டோபர் மாதம் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண்ட ஈரானிய அதிகாரிகள் குழுவில் மொக்பருவும் சென்றிருந்தார்.

அப்போது, ரஷ்ய இராணுவத்திற்கு ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் வழங்க ஒப்புக்கொண்டார். அதேசமயம், முகமது மொக்பர் முன்பு, செட்டாட் (Setad) அமைப்பின் தலைவராக இருந்தார். இது உச்ச தலைவருடன் இணைக்கப்பட்ட முதலீட்டு நிதி அமைப்பாகும்.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடு, அணு அல்லது பாலிஸ்டிக் ஏவுகணை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் மொக்பர் பெயரைச் சேர்த்திருந்த நிலையில், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அவரது பெயரை நீக்கியமை குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க்

விண்வெளி பறந்த

## முதல் கருப்பின விண்வெளி வீரர்

அமெரிக்காவின் முதல் கருப்பின விண்வெளி வீரர் எட் டுவைட் (Ed Dight) சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளிக்கு பயணம் மேற்கொண்டார். அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸின் ப்ளு ஆரிஜின் விண்கலத்தில் அவர் பயணித்தார். அவருடன் மேலும் 5 பேர் பயணித்தனர்.

அமெரிக்க விமானப்படையின் விமானியாக எட் டுவைட் பணியாற்றிய காலத்தில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப். கென்னடி, அவரை நாசாவின் ஆரம்பகால விண்வெளி வீரர்களுக்கான தேர்வு பட்டியலில் சேர்த்திருந்தார். ஆனால், அவரை நாசா தெரிவு செய்யவில்லை. இந்தச் சூழலில் நிறவெறி பேதம் காரணமாக தனது பணியை 1966இல் துறந்தார்.

இந்நிலையில் 90 வயதான அவர், தற்போது விண்வெளிக்கு பயணித்து, விண்வெளியில் மிதந்துள்ளார். இது சிறந்த அனுபவமாக இருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

விமான பணியில் இருந்து விலகிய பிறகு சிற்பக் கலையில் ஆர்வம் செலுத்திய அவர், அதில் முதுகலை பட்டமும் பெற்றுள்ளார். நிறவெறி பேதம் சார்ந்த சிற்பங்களை அவர் வடிவமைத்து வருகிறார்.

காசா

காசாவின் கடைசி மருத்துவமனையும்

## இஸ்ரேல் வசம்

காசாவில் அல்அவ்டா மருத்துவமனையை இஸ்ரேலிய படையினர் முற்றுகையிட்டுள்ளனர். இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பித்த பின்னர் காசாவின் வடபகுதியில் செயற்பட்டுக்கொண்டிருந்த ஒரேயொரு மருத்துவமனை இதுவாகும்.

மருத்துவமனையை நோக்கி எறிகணை தாக்குதலை மேற்கொண்ட பின்னர் இஸ்ரேலிய படையினர் அந்த மருத்துவமனையை சுற்றிவளைத்துள்ளனர் என செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், மருத்துவமனைக்கு அருகில் உள்ள கட்டிடங்களை இஸ்ரேலிய படையினர் புல்டோசர்களை பயன்படுத்தி அழித்துள்ளனர்.

மேலும், இஸ்ரேலிய



படையினர் மருத்துவமனையை முற்றுகையிட்டுள்ளதன் காரணமாக பொதுமக்களும் மருத்துவ சுகாதார பணியாளர்களும் மருத்துவமனைக்குள் நுழையவோ, வெளியே செல்லவோ முடியாத நிலை காணப்படுகின்றது.

அதேசமயம், சனிக்கிழமை ஜபாலியா அகதிமுகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த பலர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அல்அவ்டா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா

இறந்த தாயின் சடலத்துடன் வசித்த

## மனநலம் பாதித்த மகளும் இறந்தார்

கர்நாடகாவில், தாய் இறந்துபோனதுகூடத் தெரியாமல் அந்தச் சடலடத்துடன் 4 நாட்கள் உணவின்றி கிடந்த மனநலம் பாதிக்கப்பட்ட மகளும் இறந்துபோன சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கர்நாடக மாநிலம் உடுப்பி மாவட்டம் குந்தாப்பூர் தாலுகா கோபாடி கிராமத்தைச் சேர்ந்தவர் 62 வயதான ஜெயந்தி ஷெட்டி. இவரது மகள் பிரகதி ஷெட்டி (32). மனநலம் பாதித்த பிரகதியை, கணவரின் இறப்புக்குப் பிறகு, தாய் ஜெயந்தியே கவனித்து வந்துள்ளார்.

இதற்கிடையே, ஜெயந்திக்கு நீரிழிவு நோய் பாதிப்பு ஏற்பட்டு அதனால் சமீபத்தில் கால் ஒன்றும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், மகளைச் சிரமப்பட்டு கவனித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 4 நாட்களாக ஜெயந்தி வீPடு திறக்கப்படவில்லை. மேலும், அவரது வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால் சந்தேகமடைந்த அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

லக்னோ

பாஜக வேட்பாளருக்கு

## 8 முறை வாக்களித்த இளைஞர் கைது

உத்தரப் பிரதேசத்தில் பரூக்காபாத் எனும் இடத்தில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் இளைஞர் ஒருவர் பாரதிய ஜனதா கட்சிக்கு (பாஜக) 8 முறை வாக்களித்துவிட்டு அதை காணொளியாகவும் பதிவு செய்து வெளியிட்ட நிலையில் சம்பந்தப்பட்ட இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதோடு, அந்தக் குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் மறுவாக்குப்பதிவு நடத்தவும் உத்திரவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடு முழுவதும் மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடந்து வருகிறது. ஏற்கனவே 4 கட்டங்கள் முடிவடைந்த நிலையில் நேற்று (20) ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்நிலையில் கடந்த மே 13ஆம் திகதி நடந்த 4ஆம் கட்ட தேர்தலின்போது உத்தரப் பிரதேசத்தின்



பரூக்காபாத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடியில் வாக்களித்த இளைஞர், முகேஷ் ராஜ்புட் என்ற பாஜக வேட்பாளருக்கு ஆதரவாக 8 முறை வாக்களித்தார். அதை காணொளியாகவும் பதிவு செய்திருந்தார்.

இதேசமயம், அந்த காணொளியை உ.பி. முன்னாள் முதல்வரும் சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ் யாதவும் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, குறித்த காணொளியின் அடிப்படையில் ராஜன் சிங் என்ற இளைஞரை பொலிஸார் கைதுசெய்து, வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# மன்செஸ்டர் சிற்றி சம்பியன்

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில் மன்செஸ்டர் சிற்றி சம்பியனானது.


தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற வெஸ்ட் ஹாம் யுனைட்டெடுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே தொடர்ச்சியாக நான்காவது தடவையாக சிற்றி சம்பியனானது.

புள்ளிகள் பட்டியலில் 91 புள்ளிகளை சிற்றி பெற்ற நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் வென்ற ஆர்சனல் 89 புள்ளிகளைப் பெற்றது.

இம்முறையோடு சேர்த்து கடந்த ஏழு ஆண்டுகளில் ஆறு தடவைகள் சிற்றி சம்பியனானது.




## லீக் தொடர் ஆரம்பம்




பி.கேதீஸ்

மாத்தறை மாவட்டம் தெனியாய ஹேண்பர்ட் சௌபாக்கியா தமிழ் வித்தியாலய பழைய மாணவர் ஒன்றியம் லீக் தொடர் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்துள்ளது.

பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான அணிக்கு 11 பேர் கொண்ட லீக் தொடர் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டி இம்மாதம் 23ம்,24ம் ஆம் திகதிகளில் நடைபெறும்.

போட்டிகள் யாவும், ஹேண்பர்ட் சௌபாக்கியா தமிழ் வித்தியாலய மைதானத்தில் அன்றைய தினங்களில் காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளது.

## ஐ.பி.எல்: மூன்றாமிடத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ்


இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) புள்ளிகள் பட்டியலில் மூன்றாமிடத்தை ராஜஸ்தான் றோயல்ஸ் பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெறவிருந்த கொல்கத்தா றைட் றைடர்ஸுடனான போட்டியானது மழையால் கைவிடப்பட்ட நிலையிலேயே 14 போட்டிகளில் 17 புள்ளிகளைப் பெற்றிருந்தது.

இதேவேளை ஹைதரபாத்தில் நடைபெற்ற மற்றைய போட்டியில் பஞ்சாப் கிங்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

அந்தவகையில் சண்றைசர்ஸும், ராஜஸ்தானும் தலா 17 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஓட்ட விகிதத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற சண்றைசர்ஸ் முதலாவது தகுதிகாண் போட்டிக்குத் தகுதிபெற, மூன்றாமிடத்தைப் பெற்ற ராஜஸ்தான் வெளியேற்றப் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவுடன் மோதவுள்ளது.

அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது தகுதிகாண் போட்டியில் சண்றைசர்ஸை கொல்கத்தா நைட்றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.





எமிலியா றொமக்னா குரான் பிறீ:

## வென்ற வெர்ஸ்டப்பன்

இத்தாலியின் இமோலாவில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற எமிலியா றொமக்னா குரான் பிறீயில் நெதர்லாந்தின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

பந்தயத்தை முதல்நிலையிலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் வென்ற நிலையில், பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த பிரித்தானியாவின் லான்டோ நொரிஸ் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த மொனாக்கோவின் சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 161 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியனான வெர்ஸ்டப்பன் முதலிடத்தில் உள்ளார். 113 புள்ளிகளுடன் பெராரி அணியின் லெக்கலெர்க் இரண்டாமிடத்தில் உள்ளதுடன், மெக்ஸிக்கோவின் சேர்ஜியோ பெரேஸ் 107 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலுள்ளார்.



சர்வதேச ‘ரோலர் நெட்டெட் போல்’ சம்பியனான இலங்கையணியின்

## மன்னார் வீரர்கள் கௌரவிப்பு

எஸ்.ஆர். லெம்பேட்

சர்வதேச ‘ரோலர் நெட்டெட் போல்’ விளையாட்டின் 2024ஆம் ஆண்டு சர்வதேச ரீதியிலான நாடுகள் பங்குபற்றிய விளையாட்டுப் போட்டிகள் கம்பஹா விமான நிலைய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் பங்குபற்றிய இலங்கையணி ஒட்டுமொத்த விளையாட்டுப் போட்டிகளிலும் சம்பியனாகியிருந்தது. இதில் இலங்கையணி சார்பாக பங்குகொண்ட மன்னார் மாணவர், மாணவிகளுக்கு பாராட்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது.

ரோல் போல் விளையாட்டானது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு முதல் முதலாக மன்னர் மாவட்டத்தில் விளையாட்டுக் குழு ஆரம்பிக்கப்பட்ட தாகவும் மன்னார் மாவட்ட விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சிறப்பாக விளையாடி வருவதாகவும் சர்வதேச ரோல் போல் விளையாட்டு எதிர்வரும் ஆண்டு மன்னாரில் நடைபெறவுள்ளதாகவும் இலங்கை ரோல் போல் சம்மேளனத்தின் செயலாளர் இதன்போது தெரிவித்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 21 மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.